தினமலர்

● வியாழன் ● ஆகஸ்ட் 8 2019

# 'மாணவர்கள் வரலாறு படைக்க வேண்டும்'




■ கே.பி.ஆர்., கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் வணிகவியல் துறை சார்பில், நேற்று நடந்த காமர்சியோ–2019 துவக்க விழாவில் ஆடிட்டர் ஜலபதி பேசினார். அருகில் இடமிருந்து கல்லூரி முதல்வர் பாலுசாமி, செயலர் முனுசாமி உள்ளிட்டோர்.

**கோவை, ஆக. 8–**

கே.பி.ஆர்., கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரி வணிகவியல் துறை சார்பில், 'காமர்சியோ–2019' துவக்க விழா நடந்தது.

ஆடிட்டர் ஜலபதி பேசுகையில், ''வெற்றி பெறுபவர்களை பார்த்து, தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். வேலையில் உண்மை, பற்று இருந்தால் வெற்றி நிச்சயம். உள்ளதைக் கொண்டு வெற்றி பெற, கற்றுக் கொள்ள வேண்டும். 2.8 லட்சம் ஆடிட்டர்களில், ஒரு லட்சம் பேர் மட்டுமே, தங்கள் துறைகளில் பணிபுரிகின்றனர். இன்னும், 90 ஆயிரம் அலுவலகங்களில் ஆடிட்டர்கள் தேவைப்படுகின்றனர். வரலாற்றை படிப்பவர்களாக இல்லாமல், அதை படைப்பவர்களாக இருக்க வேண்டும்,'' என்றார்.

முன்னதாக, கல்லூரி செயலர் முனுசாமி, விழாவுக்கு தலைமை வகித்தார். முதல்வர் பாலுசாமி உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.